செய்தி வெளியீடு எண்:615 நாள்: 23.12.2016

# செய்தி வெளியீடு

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 17 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் டிசம்பர் 2016 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 24.12.2016 அன்று காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 17 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | A.R.C. மேல் நிலைப் பள்ளி, 38, சைவ முத்தையா முதலி தெரு, சென்னை–1 (மாடி பூங்கா அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை மாநகராட்சி உருது நடுநிலைப்பள்ளி,அர்த்துான் சாலை , இராயபுரம்,சென்னை – 13.( ³ ரிலால் மருத்துவமனை அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை தொடக்கப்பள்ளி, பாப்பம்பாள் 12 வது தெரு GKM காலனி,சென்னை – 82. (கே 9,பெரவள்ளூர் காவல் நிலையம் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை உயர்நிலைப் பள்ளி, 9, தியாகப்பா தெரு,கீழ்ப்பாக்கம், சென்னை – 10. கோட்டம் எண்.103( கீழ்ப்பாக்கம் தோட்டம் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | அரசினர் உயர்நிலைப் பள்ளி,பள்ளிகூடத் தெரு,பல்லவன் நகர், நெற்குன்றம், சென்னை – 107(வெங்காய மண்டி பஸ் நிலையம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | பத்மா சாரங்கபாணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,32,குமாரசாமி நகர், வில்லிவாக்கம்,சென்னை – 49 (சிங்காரம் பிள்ளை ஆண்கள் மேல் நிலைப்பள்ளி எதிரில்) |
| 7 | திருவொற்றியூர் | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.குழந்தைகள் மையம்,7வது பிளாக், முதல் தெரு,கண்ணதாசன் நகர்,சென்னை – 118. (அம்மா உணவகம் அருகில்) |
| 8 | ஆவடி | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,கிராண்ட்லைன், புழல் ஒன்றியம், மாதவரம் நெடுஞ்சாலை,சென்னை – 52 (ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் ) |
| 9 | ஆர்.கே.நகர் | சென்னை உயர்நிலைப்பள்ளி,எம்.பி.டி காலனி,சென்னை – 81. ( எம்.பி.டி மசூதி எதிரில்) |
| 10 | தி.நகர் | அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி ,ஆற்காடு ரோடு,வளசரவாக்கம், சென்னை– 600 087.(மாநகராட்சி மண்டல அலுவலகம் அருகில்) |
| 11 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,எண்.10, சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை.600 028(மந்தவெளி ரயில்நிலையம் அருகில்) |
| 12 | பரங்கிமலை | கண்டோன்மென்ட் கழக துவக்கப்பள்ளி,பல்லாவரம், சென்னை–43. (பழைய சந்தை ரோடு ) |
| 13 | தாம்பரம் | அம்பேத்கர் சமுதாயநலக்கூடம், முடிச்சர் சென்னை.48.(சர்ச் அருகில்) |
| 14 | சைதாப்பேட்டை | வித்யாசாகர் சகோதரத்துவ நடுநிலைப்பள்ளி,எண்.36/48, சேஷாச்சலம் தெரு, சைதாப்பேட்டை,சென்னை–600 015. (சைதாப்பேட்டை ரயில் நிலையம் அருகில்) |
| 15 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,எண்1,திருவள்ளுவர் சாலை,, தேனாம்பேட்டை, சென்னை–600 018.(வேலு மிலிட்டரி ஓட்டல் எதிரில்) |
| 16 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி சமுதாயநலக்கூடம்,கதவு எண்.123/3,சிங்கன்ன செட்டித் தெரு, சிந்தாதரிப்பேட்டை, சென்னை.2. (சிந்தாதரிப்பேட்டை காவல் நிலையம் எதிரில் ) |
| 17 | சோழங்கநல்லூர் | குடிசை மாற்று வாரியம் பகுதி, ( 8 அடுக்கு மாடி)எழில் நகர் பெரும்பாக்கம், சென்னை.100.(செம்மஞ்சேரி பேருந்து நிலையம் அருகில்) |

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**